# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,928—1962 පෙබරවාරි 9 වැනි සිකුරාදා—1962.2.9

12,928 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 43 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கையில் சாரணர் இயக்கம் தோன்றிய ஐம்பதாவது ஆண்டு நிறைவை நினைவு கூருதற்கான விசேட முத்திரை வெளியீடு

இலங்கையில் சாரணர் இயக்கம் தோன்றிய ஐம்பதாவது ஆண்டு நிறைவை நினைவு கூருவதற்காக 1962 ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம் 26 ஆம் திகதியன்று விசேட 35 சத முத்திரைகள் வெளியிடப்படுமென்று இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இந்த முத்திரைகள் 1962 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 31 ஆம் திகதிவரை அல்லது கையிருப்பு முடியும் வரையுள்ள தினங்களில் எது முந்தியதோ அந்தத் தினம்வரை விற்பனையிலிருக்கும். இம்முத்திரைகள் விற்பனையில் இருக்கும் காலத்தில் தற்போது இதேவிலையிலுள்ள முத்திரைத் தொடர்களின் விற்பனை நிறுத்தப்படும்.

இம் முத்திரையின் மத்தியில் இலங்கைச் சாரணரின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் இரு மருங்கிலும் 1912–1962 என்ற திகதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு, பெப்ருவரி, 1962.

2–296.

---

### 1958 ம் ஆண்டின் 12 ம் இலக்கத் தேயிலை உதவிப் பணச் சட்டம்

1961ம் ஆண்டின் 66ம் இலக்கத் தேயிலை, இறப்பர் உதவிப் பணத் (திருத்தச்) சட்டத்தினுற்றிருத்தியமைக்கப்பட்டுள்ளபடியான 1958ம் ஆண்டின் 12ம் இலக்கத் தேயிலை உதவிப் பணச் சட்டத்தின் 10வது பிரிவின் கீழ் விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரினுல் ஆக்கப்பட்ட பிரமாணம்.

சீ. பீ. டி சில்வா,
விவசாய, காணி, நீர்ப்பாசன,
மின்சார அமைச்சர்.

கொழும்பு,
30.1.62.

#### பிரமாணம்

1959 ஆகஸ்டு 21ம் தேதிய 11, 836ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டுள்ள பிரமாணத்தினுல் திருத்தியமைக்கப்பட்டுள்ளபடியான 1958 நவம்பர் 7ம் தேதிய, 11, 579ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1958ம் ஆண்டின் தேயிலை உதவிப் பண பிரமாணங்கள் மேலும் பின்வருமாறு இதனுல் திருத்தியமைக்கப்படுகின்றன.

(1) 2 வது பிரமாணத்திற்குப் பதிலாக, பின்வரும் பிரமாணத்தினை இடுவதன் மூலம்,

"2. இப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமைய, தேயிலைத் தோட்டம் ஒன்றின் அல்லது சிறு தேயிலைத்தோட்டம் ஒன்றின், அல்லது இறப்பர்த் தோட்டம் ஒன்றின் அல்லது சிறு இறப்பர்த் தோட்டம் ஒன்றின் சொந்தக்காரனுல் அதற்கென எழுத்தில் விண்ணப்பஞ் செய்யப்படுமிடத்து அச்சொந்தக்காரனுக்கு தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரியின் தேயிலை உதவிப் பண நிதியிலிருந்து

(அ) அத்தகைய தேயிலை தோட்டத்தினை, சிறு தேயிலைத் தோட்டத்தினை இறப்பர்த் தோட்டத்தினை அல்லது சிறு இறப்பர் தோட்டத்தினை முழுவதிலும் அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியில் திரும்பவும் நடுவதற்காக அல்லது,

(ஆ) அத்தகைய தேயிலைத் தோட்டத்தின் அல்லது சிறு தேயிலைத் தோட்டத்தின் முழுவதையும் அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சீர்படுத்துவதற்காக, உதவிப் பணம் வழங்கலாம்,

(2) 4வது பிரமாணத்திற்குப் பதிலாக, பின்வரும் பிரமாணத்தினை இடுவதன் மூலம்,

"4 (1) தேயிலைத்தோட்டம் ஒன்றனை அல்லது சிறு தேயிலைத் தோட்டம் ஒன்றனை முழுவதாக அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியை திரும்பவும் நடுவதற்கென கொடுக்கப்படக் கூடிய உதவிப்பணத்தொகை புனர் நடுகை செய்யப்படவிருக்கும் ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூபா 2,500/– வீதமானதாகும். அது பின்வரும் முறையாக ஆறு தவணைப் பணங்களாகக் கொடுக்கப்படும்.


வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

(அ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 500/– ரூபாவான முதலாவது தவணைப்பணம் தற்பொழுது இருக்கும் தேயிலைச் செடிகளை அல்லது மற்றய செடிகளை அகற்றிய பின்பு வழங்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 750/– ரூபாவான இரண்டாவது தவணைப்பணம் மண் பாதுகாப்பு வழிவகைகள் மேற்கொண்ட பின்பு வழங்கப்படும்.

(இ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 500/– ரூபாவான மூன்ருவது தவணைப்பணம் புனர் நடுகை முடிந்தபின் வழங்கப் படும்.

(ஈ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 250/– ரூபாவான நான்காவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்த ஒரு வருட காலத்தின் பின் வழங்கப்படும்.

(உ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 250/– ரூபாவான ஐந்தாவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்து இரு வருட காலத்தின் பின் வழங்கப்படும்.

(ஊ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 250/– ரூபாவான ஆருவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்து மூன்று வருட காலத்தின் பின் வழங்கப்படும்.

(2) இறப்பர்த் தோட்டம் ஒன்றனை அல்லது சிறு இறப்பர் தோட்டம் ஒன்றனை முழுவதாக அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியை திரும்ப நடுவதற்கென கொடுக்கப்படக்கூடிய உதவிப் பணத்தின் தொகை புனர் நடுகை செய்யப்படவிருக்கும் ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூபா 1,500/– வீதமானதாகும், அது பின்வரும் முறையாக ஆறு தவணைப் பணங்களாகக் கொடுக்கப்படும்,

(அ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 200/– ரூபாவான முதலாவது தவணைப்பணம் தற்பொழுது இருக்கும் இறப்பர் மரங்களை அல்லது மற்றைய செடிகளை அகற்றிய பின் வழங்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 400/– ரூபாவான இரண்டாவது தவணைப்பணம் மண் பாதுகாப்பு வழிவகைகள் மேற்கொண்ட பின்பு வழங்கப்படும்.

(இ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 300/– ரூபாவான மூன்ருவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்த பின்பு வழங்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 200/– ரூபாவான நான்காவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்து ஒரு வருட காலத்தின் பின் வழங்கப்படும்.

(உ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 200/– ரூபாவான ஐந்தாவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்து இரு வருட காலத்தின் பின் வழங்கப்படும்.

(ஊ) ஒவ்வொரு ஏக்கருக்கும் 200/- ரூபாவான ஆருவது தவணைப்பணம் புனர் நடுகை முடிவடைந்த மூன்று வருட காலத்தின் பின் வழங்கப்படும்."

(3) பிரமாணம் 5 ல் " திரும்பச் சீர்ப்படுத்துவதற்கென உதவிப் பணம் வழங்கப்படலாம் " என்ற சொற்றெடருக்குப் பதிலாக " தேயிலைத் தோட்டத்தை அல்லது சிறு தேயிலைத் தோட்டத்தை முழுதாக அல்லது அதன் ஒரு பகுதியை திரும்பச் சீர்படுத்துவதற்கென உதவிப்பணம் வழங்கப்படலாம் " என்னும் சொற்களை இடுவதன் மூலம், அத்துடன்

(4) 12வது பிரமாணத்திற்குப் பதிலாக பின்வரும் பிரமாணத்தை இடுவதன் மூலம்.

(அ) "சொந்தக்காரன்", " புனர் நடுகை ", " இறப்பர்த் தோட்டம் ", " இறப்பர் மரம் ", " சிறு இறப்பர்த் தோட்டம் ", " திரும்பச் சீர்ப்படுத்தல் ", " தேயிலைச் செடி ", " தேயிலைத் தோட்டம் ", " சிறு தேயிலைத் தோட்டம் ", ஆகியவை 1958ம் ஆண்டு 12ம் இலக்கத் தேயிலை உதவிப்பணச் சட்டத்தில உள்ள அக்கருத்துக்களையே முறையே கொண்டுள்ளன.

(ஆ) " தேயிலை உதவிப்பண நிதி " என்பது 1958ம் ஆண்டின் 12ம் இலக்க தேயிலை உதவிப்பணச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேயிலை உதவிப்பண நிதி எனப்பொருள்படும்.

2–309

ஸ்ரீலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.